செ.வெ.எண்:  739    நாள்:  13.11.2020

**தஞ்சாவூர் மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்று காலத்தில் பணியாற்றிய மருத்துவர்களை “கொரோனா போராளிகள்” என உலக தர நாள் தினத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் பாராட்டி கௌரவித்தார்.**

தஞ்சாவூர் மாவட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உலக நுண்கதிர்தினம் மற்றும் உலக தர நாள் விழாவில் கொரோனா தொற்று காலத்தில் பணியாற்றிய 40 மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் பாராட்டி கௌரவித்தார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது

நவம்பர்8- சர்வதேச நுண்கதிர்(International day of Radiology) நாளான அன்று நுண்கதிர் கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர் வில்காம் ரோன்ஜன் அவர்களை நினைவு கூறும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது இந்நுண்கதிர் கருவிகளால் கொரோனா தொற்றுடையுரை சிடி ஸ்கேன் மூலமாக கண்டறிய மருத்துவத்துறைக்கு மிகவும் உதவியது. நுண்கதிர் தொடர்பாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கில் நுண்கதிர் தொழில் நுட்பவினர்,உதவியாளர் மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்கள்,மருத்துவர்கள்,செவிலியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நுண்கதிர் கருவி மருத்துவத்துறைக்கு எவ்வாறலாம் உதவுகிறது இதன் பயன்பாடுகள் பற்றி எடுத்துறைத்தாகள்.

உலகத் தர (International day of Quality) நாளான 12.11.2020 அன்று முன்னிட்டு அரசு மருத்துவமனைக்கு மருத்து சேவை நாடி வரும் நோயாளியிடம் கனிவோடும் இணக்கமாகவும் சேவைகள் வழங்கப்பட்டு,தனியார் மருத்துவமனைக்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் சேவை தரத்தை உறுதி செய்யும் நோக்கத்தில் முன்னிலைப்படுத்தும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது இந்நாளில் கொரோனா தொற்று பேரிடர் காலத்தில் எவ்வித மனச்சோர்வும் அடையாமல் 24 மணி நேரமும் பணியாற்றிதில் 24 மருத்துவர்களில் 12 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது அவையிற்றிலிருந்து மீண்டு பொது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தோடு பணியாற்றிய மருத்துவர்களையும்,மருத்துவ பணியாளர்களும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள்,ஊழியர்கள் செவிலியர்கள்,பணியாளர்கள் என அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு சுமார் 10,000 கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளனர் கொரோனா சிகிச்சையில் சிறப்பாக பணி மேற்கொண்ட மருத்துவக கல்லூரி பல துறைகளில் பல பிரிவுகளில் பணியாற்றிய ஊழியர்கள் உட்பட 40 பேர் நபருக்கு இவர்களுடைய சேவையை பாராட்டும் விதமாக **“கொரோனா போராளிகள்”** என்று கௌரிவிக்கப்படுவதில் மகிழ்ச்சியும்,சிறப்பாக மருத்துவ சேவை புரியும் இம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை நிர்வாகத்திற்கு என் பாராட்டுதலையும் நன்றியையும் உலக தர நாளில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ).மரு.மருதுதுறை மற்றும் மருத்துவ பேராசிரியர்கள்,உதவி பேராசிரியர்கள்,நுண்கதிர்த்துறை நுட்ப்புனர்,மருத்துவ பணியாளர்கள்,செவிலியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.